தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்காக

# நாடாளுமன்றத்தில் கழக உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகள்!



11 - 12 -2025

**புதுடெல்லி, டிச. 12 -**

**நாடாளுமன்ற குளிர் கால கூட்டத் தொடர் 1.12.2025 அன்று தொடங்கியது. இத்தொடரில் மக்களவை, மாநிலங்க ளவை இரு அவைகளிலும் கழக நாடாளு மன்ற உறுப்பினர்கள் தமிழ்நாட்டின் நலனுக் காக முன்னேற்றத்திற்காக நேற்று (11.12.2025) எழுப்பிய கேள்விகள் வருமாறு:**

**1. சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழிற்துறை நிறுவனங்களுக்கு புத்துயிர் அளிக்க நடவடிக்கை என்ன?**

**ஆ. இராசா எம்.பி. கேள்வி**



கடந்த ஐந்து ஆண்டு களாக நெருக்கடியைச் சந்தித்து வரும் குறு, சிறு மற்றும்நடுத்தரத்தொழில் நிறுவனங்கள் துறைக்கு புத்துயிர் அளிக்க தற்போ துள்ள திட்டங்களின் விவரங்கள் குறித்து ஒன்றிய அரசிடம் மக்களவையில் திமுக துணைப் பொதுச் செயலாளர் ஆ. இராசா எம்.பி. கேள்வி எழுப்பியுள்ளார்.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனத் துறைக்கு அவற்றின் நடை முறைமூலதனத்திற்காகபிணையமில்லா காலக் கடன் வழங்க அரசு எடுத்துள்ள நட வடிக்கைகள் என்ன? குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் வளர வும், உலக அளவில் போட்டியிடவும் உத வும் வகையில், நிதி உதவி, ஒழுங்கு முறை மாற்றங்கள் மற்றும் தொழில்நுட்ப ஆதரவு ஆகியவற்றை உள்ளடக்கிய ஏதே னும் ஒரு தொகுப்புத் திட்டம் வகுக்கப்பட் டுள்ளதா? தமிழ்நாட்டில், எத்தனை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங் கள் பயனடைந்துள்ளன, மற்றும் அதன் மூலம் உருவாக்கப்பட்ட வேலைவாய்ப்பு களின் எண்ணிக்கை யாது? உள்நாட்டுச் சந்தையிலும் உலக அளவிலும் அவற் றின் தயாரிப்புகளை சந்தைப்படுத்துவதை எளிதாக்குவதற்காக, பல்வேறு துறைகள் கொள்முதலில் முன்னுரிமை அளிப்பது உட்பட, எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விவரங்கள் யாவை? எனவும் அவர் கேட் டுள்ளார்.

**2. டெல்டா பகுதி விவசாயிகளின்மீது அக்கறை இல்லாத ஒன்றிய அரசு!**

**தஞ்சாவூர் முரசொலி எம்.பி. குற்றச்சாட்டு!**



உணவு பதப்படுத்து தல் மற்றும் சேமிப்பை வலுப்படுத்த டெல்டா பகுதியின் விவசாயத் திறனைப் பயன்படுத் திக்கொள்ள ஒன்றிய அரசு நடவடிக்கை எடுக் காதது ஏன் என திமுக மக்களவை உறுப் பினர் முரசொலி கேள்வி எழுப்பியுள்ளார். விவசாய உற்பத்தித்திறனை மேம்படுத்த வும், அறுவடைக்குப் பிந்தைய இழப்புக ளைக் குறைக்கவும் மற்றும் ஏற்றுமதி சார்ந்த பதப்படுத்துதலை ஊக்குவிக்கவும் முன்மொழியப்பட்ட நடவடிக்கைகளின் விவரங்கள் மற்றும் காலக்கெடு என்ன? விவசாய முக்கியத்துவம் வாய்ந்த டெல்டா பகுதியில் ஒன்றிய அரசின் போதிய ஊக்கு விப்பு இல்லாததற்கு காரணங்கள் என்ன என்றும் அவர் கேட்டுள்ளார்.

**3. MSME நிறுவனங்களில் பூஜ்ஜிய குறைபாடு பூஜ்ஜிய பாதிப்பு (ZED)திட்டத்தின் செயல்திறனை வெளியிடுக!**

**பெரம்பலூர் அருண் நேரு எம்.பி. கேள்வி**



சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்க ளுக்கான நிலையான சான்றிதழ் திட்டம் தொடங்கப்பட்டதி லிருந்து, பூஜ்ஜிய குறைபாடு பூஜ்ஜிய பாதிப்பு (ZED) உற்பத்தித் திட்டத்தின் கீழ் சான்றளிக்கப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத் தர நிறுவனங்களின் விவரங்கள் கேட்டு திமுக பெரம்பலூர் மக்களவை உறுப்பி னர் அருண் நேரு கேள்வி எழுப்பி யுள்ளார்.

மாநிலத்தில் உள்ள சிறு மற்றும் குறு நிறுவனங்களிடையே ZED தரநிலை களை ஊக்குவிப்பதற்காக அரசாங்கத் தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் என்ன என்றும் வழங்கப்பட்ட நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகள் குறித்தும் அவர் கேட்டுள்ளார். நிறுவனங்களின் தயாரிப் புத் தரம், சுற்றுச்சூழல் நிலைத்தன்மை மற்றும் ஏற்றுமதிப் போட்டித்திறன் ஆகி யவை குறித்தும் ZED திட்டத்தைச் செயல் படுத்துவதில் எதிர்கொள்ளப்படும் சவால் கள் குறித்தும் அருண் நேரு எம்.பி. அவர்கள் கேட்டுள்ளார்.

**4. கள்ளக்குறிச்சியில் மேம்பட்ட தொழில் முனைவோர் திறன் மேம்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்த நடவடிக்கை என்ன?**

**கள்ளக்குறிச்சி மலையரசன் எம்.பி. கேள்வி**



கள்ளக்குறிச்சி நாடா ளுமன்றத் தொகுதியில் மேம்பட்ட தொழில்மு னைவோர் திறன் மேம் பாட்டுத் திட்டத்தின் (E-SDP) தற்போதைய செயலாக்க நிலை, பயிற்சி மையங்களின் எண்ணிக்கை, நடத்தப்பட்ட திட்டங்கள், பயிற்சி பெற்றவர்கள் மற்றும் பயன டைந்த தொழில்முனைவோர்களின் எண் ணிக்கை உள்ளிட்ட விவரங்கள் குறித்து கள்ளக்குறிச்சி திமுக மக்களவை உறுப்பி னர் மலையரசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இத்திட்டத்தின் முக்கிய கூறுகள் மற்றும் பயிற்சி தொகுதிகள் யாவை? மேலும், வளர்ந்து வரும் தொழில்முனைவோர், புத்தொழில் நிறுவனங்கள் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த நிறுவனங்களின் குறிப்பிட்ட தேவைகளைப் பூர்த்தி செய்ய இந்தத் தொகுதிகள் எவ்வாறு வடிவமைக் கப்பட்டுள்ளன? கள்ளக்குறிச்சி மக்கள வைத் தொகுதியில் தொழில்முனை வோரை ஊக்குவித்தல், சுயவேலை வாய்ப்பை உருவாக்குதல் மற்றும் உள் ளூர் பொருளாதார மேம்பாடு ஆகியவற் றில் இத்திட்டத்தின் தாக்கம் என்ன? பய னாளிகளுக்குப் பயிற்சியின் தரத்தை மேம்படுத்தவும், வழிகாட்டுதலை வழங் கவும் மற்றும் நிதி உதவிகளுக்கான கோரிக்கைகளை பூர்த்தி செய்யவும் அரசை எளிமையாக அணுக செயல்திட் டங்கள் என்ன? மேம்பட்ட E-SDP திட்டத்தின் வெற்றி மற்றும் நிலைத் தன்மையை கண்காணித்தல், மதிப்பீடு செய்தல் மற்றும் நீண்ட கால மதிப்பீடு செய்வதற்காகப் பின்பற்றப்படும் செயல் முறை என்ன? எனும் பல்வேறு கேள்வி களை அவர் எழுப்பியுள்ளார்.

**5. தேசிய நெடுஞ்சாலைத் கட்டுமானங் களை கைவிடுகிறதா ஒன்றிய அரசு?**

**சேலம் செல்வகணபதி எம்.பி. கேள்வி!**



2026ஆம் நிதி யாண்டின் இறுதிக்குள் 10,000 கிலோமீட்டர் தேசிய நெடுஞ்சா லைத் திட்டங்களுக்கு ஒப்பந்தம் வழங்க அர சாங்கம் பரிசீலித்து வருகிறதா என சேலம் மக்களவை உறுப் பினர் செல்வகணபதி கேள்வி எழுப்பியுள் ளார். கடந்த மூன்று ஆண்டுகளில் ஒப்பந் தம் வழங்குவது 12,000 கிலோமீட்டரி லிருந்து 6,000 கிலோமீட்டராகக் கடுமை யாகக் குறைந்துள்ளது ஏன் என்றும் ஒரு திட்டத்திற்கு ஒப்புதல் அளிப்பதற்கும் அது செயல்பாட்டிற்கு வரும் தேதிக்கும் இடை யிலான காலத்தைக் குறைப்பதற்காக அர சாங்கம் எடுத்த நடவடிக்கைகள் என்ன என்றும் அவர் கேட்டுள்ளார்.

**6. தமிழ்நாட்டில் SATAT திட்டத்தின்கீழ் CBG எரிவாயு ஆலைகளின் நிலை என்ன?**

**டாக்டர்.கலாநிதி வீராசாமி எம்.பி. கேள்வி**



மலிவு விலை போக் குவரத்திற்கான நிலை யான மாற்று வழி (SATAT) திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் இயங்கி வரும் ஆலைகளின் எண்ணிக்கை உட்பட, சுருக்கப்பட்ட உயிரி எரிவாயு (CBG) ஆலைகளை தற்போதைய நிலை என்ன என்று மக்களவையில் திமுக வட சென்னை உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி கேள்வி எழுப்பியுள்ளார். இத்த கைய ஆலைகளை அமைப்பதற்கான அளவுகோல்கள் மற்றும் நடைமுறைகள் யாவை, மேலும் இந்தத் திட்டத்தின் கீழ் ஆதரவு பெற்ற தொழில்முனைவோர் மற் றும் அமைப்புகளின் எண்ணிக்கை என்ன? இந்த CBG ஆலைகள் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி, சுற்றுச் சூழல் நிலைத்தன்மை மற்றும் கிராமப்புற வளர்ச்சி ஆகியவற்றில் ஏற்படுத்தும் தாக் கம் என்ன? CBG ஆலைகளை அமைப் பதை விரைவுபடுத்தவும், இந்தத் திட்டம் பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டு வெற்றி பெறுவதை உறுதி செய்யவும் எடுக்கப் பட்டு வரும் நடவடிக்கைகள் என்ன? மேலும் பல CBG ஆலைகளை அமைப்ப தற்காக விவசாயிகள் மற்றும் தொழில்மு னைவோரிடையே விழிப்புணர்வையும் பங்கேற்பையும் ஊக்குவிக்க அரசாங்கம் எவ்வாறு திட்டமிட்டுள்ளது? எனும் பல் வேறு கேள்விகளை CBG ஆலைகள் குறித்து கலாநிதி வீராசாமி கேட்டுள்ளார்.

**7. முறைசாரா தொழிலாளர்களின் நிரந்தர வருமானம் மற்றும் நலன் மேம்பட நடவடிக்கை என்ன?**

**ஆர்.கிரிராஜன் எம்.பி. கேள்வி**



நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி யில் ஏறக்குறைய 50% பங்களிக்கும் முறைசாரா தொழில் அமைப்புகளுக்கு முறையான பாது காப்பும் வாய்ப்புகளும் இல்லை என்பது குறித்து திமுக எம்.பி. ஆர். கிரிராஜன் மாநி லங்களவையில் கேள்வி எழுப்பியுள்ளார்.

முறைசாரா தொழிலாளர்களுக்காக ஒன்றிய அரசு கொண்டு வந்த 'டிஜிட்டல் ஷ்ரம்சேது' என்ற தேசியத் திட்டதின் தற் போதைய செயல்நிலை என்ன? முறை சாரா துறையில் நிதிப் பாதுகாப்பின்மை மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சி இல் லாமை போன்ற சவால்களை எதிர் கொள்ள ஒன்றிய அரசு செயற்கை நுண் ணறிவு, பிளாக்செயின் மற்றும் அதிநவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துகி றதா என்றும் நாட்டில் உள்ள முறைசாரா தொழிலாளர்களின் சராசரி ஆண்டு வரு மானத்தை அதிகரிக்க அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட பயனுள்ள நடவடிக்கைகள் யாவை? என்றும் அவர் கேட்டுள்ளார்.

கோவை, மதுரை மக்கள் பெரிதும் எதிர்பார்த்திருந்த

# மெட்ரோ ரயில் திட்டப்பணிகளை ஒன்றிய அரசு நிராகரித்தது ஏன்?

## நாடாளுமன்றத்தில் – தயாநிதி மாறன் கேள்வி!

*புதுடெல்லி, டிச. 12-*

தமிழ்நாடு உள்ளிட்ட தென்மாநிலங்களால் சமர்ப் பிக்கப்பட்ட பல மெட்ரோ ரயில் திட்ட முன்மொழிவு களையும், குறிப்பாக கோயம்புத்தூர் மற்றும் மதுரை மெட்ரோ ரயில் திட்டங்களுக்கான விரி வான திட்ட அறிக்கைகளை யும் ஒன்றிய அரசு நிராகரித்ததற்கான நியாய மான காரணங்கள் என்ன? என்றும் 2011ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெ டுப்பின் அடிப்படையில் தகுதியை நிர்ணயம் செய்ய ஒன்றிய அரசு முடிவெடுத்தது ஏன்? என்றும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினரும் திமுக நாடா ளுமன்ற குழுத் துணைத் தலைவருமான தயாநிதி மாறன் எம்.பி., நாடாளு மன்றத்தில் கேள்வி எழுப்பி யுள்ளார்.

அதன் விவரங்கள் வரு மாறு:-

தமிழ்நாடு உள்ளிட்ட தென்மாநிலங்களால் சமர்ப் பிக்கப்பட்ட பல மெட்ரோ ரயில் திட்ட முன்மொழிவு களையும், குறிப்பாக கோயம்புத்தூர் மற்றும் மதுரை மெட்ரோ ரயில் திட்டங்களுக்கான விரி வான திட்ட அறிக்கைகளை யும் (DPR) 2017 மெட்ரோ



ரயில் கொள்கை, அந்தப் பகுதியின் மக்கள் தொகை 20 லட்சத்திற்கும் கீழே உள் ளது என்ற காரணங்களை காட்டி ஒன்றிய அரசு நிராக ரித்துள்ளது. அதன் முழு விவரங்கள் என்ன? மதுரை, கோவை நகரங்களின் மக் கள் தொகையை ஒப்பிடும் போது ஆக்ரா, போபால், இந்தூர், நாக்பூர் போன்ற வட மற்றும் மேற்கத்திய நக ரங்களில் மக்கள் தொகை, குறைவாகவோ இருந்தபோ திலும் அந்த நகரங்களின் மெட்ரோ திட்டங்களுக்கு மட்டும் ஒப்புதல் அளிக்கப் பட்டதற்கான காரணங்கள் என்ன?

இத்தகைய மாநில வேறு பாட்டிற்கான காரணங்க ளும் அதன் ஒப்பீட்டு அளவு கோல்களின் விவரங்களும் என்ன?

மெட்ரோ ரயில் கொள் கையின் கீழ் தகுதியை நிர் ணயம் செய்ய 2011ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்ப டையில் ஒன்றிய அரசு முடி வெடுத்தது ஏன்? அதற்கான காரணங்கள் என்ன?

வேகமாக வளர்ந்து வரும் தென்னிந்திய நகரங்க ளுக்கு தற்போதைய மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் மத்திய அரசு பரிசீலனை செய்கி றதா? அவ்வாறு செய்யவில் லையெனில் அதற்கான கார ணங்கள்; புதிய கணக்கெடு ப்பின் விவரங்கள் என்ன?

தமிழ்நாடு உட்பட தென் மாநிலங்கள் சமர்ப்பித்த பய ணிகள் எண்ணிக்கை முன்ன றிவிப்புகள் (RIDERSHIP PROJECTIONS) சுயாதீனமான அல்லது மூன் றாம் தரப்பு மதிப்பீடு இன்றி நிராகரிக்கப்பட்டனவா? அப்படி இருப்பின் அதன் விவரங்களும் இல்லையெ னில் அவ்வாறு ஆய்வு செய் யாமலேயே திட்ட முன் மொழிவுகளை நிராகரித்த தற்கான நியாயமான கார ணங்கள் என்ன?

தமிழ்நாடு உட்பட தென்னிந்திய மாநிலங்கள் முன்மொழிந்த 50:50 பங்கு பகிர்வு (EQUITY SHARING) மாதிரி, வேறு மாநிலங்களில் ஒப்பு தல் அளிக்கப்பட்ட அதே நிதி மாதிரியாக இருந்தபோ திலும் நிராகரிக்கப் பட்டதா? அவ்வாறு இருப் பின் அதற்கான காரணங்க ளும், முன்னுதார ணங்க ளின் விவரமும் என்ன? இல்லையெனில், முந்தைய முடிவுகளிலிருந்து விலகிய தற்கான காரணங்கள் என்ன?

இந்தமுன்மொழிவுகளை நிராகரிப்பதற்கு முன்பு ஒவ்வொரு கட்டங்களாக (PHASED) அமைக்கப்படும் மெட்ரோ அமைப்புகள், லைட் மெட்ரோ மாற்று வழிகள் அல்லது பேருந்து விரைவு போக்குவரத்து அமைப்பும் - மெட்ரோவும் இணைந்த (BRTS)ஹைப்ரிட் மாதிரிகள் ஆராயப்பட்ட னவா? ஆராயப்பட்டிருந் தால் அதன் விவரங்கள் என்ன?

கோயம்புத்தூர் மற்றும் மதுரை மெட்ரோ முன் மொழிவுகள் நிராகரிக்கப் பட்டது "மக்களிடையே பெரும் அதிருப்தியை" ஏற்ப டுத்தியுள்ள நிலையில், திட்ட முன் மொழிவுகளை ஒன்றிய அரசு மறு ஆய்வு செய்யத் திட்டமிட்டு ள்ளதா? திட்டமிருப்பின், மறு ஆய்வு மற்றும் மேல் நட வடிக்கைக்கு நிர்ணயிக்கப் பட்ட காலக்கெடு என்ன?

இவ்வாறு அவர் கேள்வி கள் எழுப்பினர்.

தென்சென்னையில்

# சூரிய மின்கூரை மூலம் 7357 வீடுகள் மின்சாரம் பெறுகின்றன!

## தமிழச்சி தங்கபாண்டியன் கேள்விக்கு - ஒன்றிய அரசு பதில்!

*புதுடெல்லி, டிச.12-*

தென்சென்னை தொகுதி எம்.பி. தமிழச்சி தங்கபாண் டியன் நாடாளுமன்ற மக்க ளவையில் பிரதமரின் சூரிய மின்கூரை அமைப்பு திட் டம் தொடர்பான கேள்வி களை கேட்டிருந்தார்.

குறிப்பாக சென்னையில் அதன் செயல்பாடு, தாமதத் துக்கான காரணங்கள் போன்றவற்றை கேட்டார்.

இதற்கு ஒன்றிய புதிய மற்றும் புதுப்பிக்கவல்ல எரி சக்தி இணை அமைச்சர் திரு. ஸ்ரீபாத் யெசோ நாயக் எழுத்துப்பூர்வமாக பதில் அளித்தார்.

அந்த பதிலில் கூறப்பட்டு இருப்பதாவது:

பிரதமரின் சூர்யா கர் முப்த் பிஜிலி யோஜனா என் பது கூரை சூரிய சக்தி அமைப்புகளை நிறுவு வதற் கான ஒரு தேவை சார்ந்த திட்டமாகும். இதில் உள்ளூர் மின் வினியோக நிறுவனங் களின் கிரிட் இணைக்கப் பட்ட மின்சார இணைப் பைக் கொண்ட, அனைத்து குடியிருப்பு நுகர்வோரும் இந்த திட்டத்துக்கான தேசிய போர்ட்டலில் விண் ணப்பிக்கலாம்.

தென் சென்னையை உள் ளடக்கிய சென்னை மாவட் டத்தில், 30.11.2025 நிலவரப் படி திட்டத்தின் தேசிய போர்ட்டலில் மொத்தம் 6,394 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. மொத்தம் 5,307 கூரை சூரியசக்தி அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன. இது 7,357 வீடுகளுக்கு பயன் அளிக்கிறது.

இந்த திட்டத்தின் கீழ், கூரை சூரிய சக்தி அமைப்பு களை நிறுவும் வீடுகள், நிறு வல் ஆய்வு செய்யப்பட்டு அந்தந்த மின்வினி யோக நிறுவனங்களால் அங்கீகரிக் கப்பட்டதும் மானியத்தை மீட்டெடுக்க லாம். மானி யத்தை மீட்டெடுக்க விண் ணப்பித்த வுடன், மானியம் வழங்குவதற்கான செயல் முறை தொடங்கப்பட்டு, அது பயனாளியின் வங்கிக்க ணக்கில் செலுத்தப்படும்.

இதற்கு பொதுவாக 15 நாட்கள் ஆகும்.

தமிழ்நாட்டில் நடைமு றையில் உள்ள உத்தரவுக ளின்படி, இந்த திட்டத்தின் கீழ் கூரை சூரிய சக்தியை நிறுவும் வீடுகள் நிகர அள வீட்டு வழிமுறையின் கீழ் வருகின்றன. இதில் உற்பத்தி செய்யப்படும் சூரிய சக்தி வீட்டின் மின்சார நுகர்வுக்கு ஏற்ப சரிசெய்யப்படுகிறது. இதன் மூலம் மொத்த மின் சாரக் கட்டணமும் குறைகி றது.

தமிழ்நாட்டில் நகர்ப்பு றங்கள் உள்பட நாடு முழுவ தும் இந்த திட்ட செயல் பாட்டை அதிகரிக்க புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரி சக்தி அமைச்சகம் பின்வரும் நடவடிக்கைகளை எடுத்துள் ளது. தேசிய போர்ட்டலில் பதிவு செய்வதில் இருந்து குடியிருப்பு நுகர்வோரின் வங்கிக்கணக்கில் நேரடியாக மானியம் வழங்குவது வரை அனைத்தும் ஆன்லைன் செயல்முறை.

தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிடம் இருந்து சலுகை வட்டி விகிதத்தில் 10 ஆண்டுகள் கால அவகாசத்து டன் பிணையமற்ற கடன் கிடைக்கும். தொழில்நுட்ப சாத்தியக்கூறு தேவையை தள்ளுபடி செய்வதன் மூலம்



ஒழுங்குமுறை ஒப்புதல் செயல்முறை எளிதாக்கப் பட்டு உள்ளது. 10 கிலோ வாட் வரை தானியங்கி சுமை மேம்பாட்டை அறிமு கப்படுத்துதல். நிகர அள வீட்டு ஒப்பந்தம் தேசிய போர்ட்டலில் பயன்பாட் டின் ஒரு பகுதியாக மாற்றப் பட்டுள்ளது.

போதுமான மற்றும் தகு திவாய்ந்த விற்பனையா ளர் கள் கிடைப்பதை உறுதி செய்வதற்காக விற்பனை யாளர்களைப் பதிவு செய்வ தற்கான எளிமைப்படுத்தப் பட்ட செயல்முறை உள் ளது. திறமையான மனிதவளத்தை உருவாக்கு வதற்கான திறன் மேம்பாடு மற்றும் பயிற்சித் திட்டங்கள் நடத்தப்படுகின்றன. நாட் டில் உள்ள முன்னணி செய் தித்தாள்களில் அச்சு விளம்ப ரம், தொலைக்காட்சி விளம்பர பிரசாரங் கள், பிராந்திய சேனல்கள் உள்ளிட்ட எப்.எம். நிலை யங்கள் முழுவதும் வானொலி பிரசாரங்கள் போன்ற விழிப்புணர்வு மற் றும் வெளிநடவடிக்கை நிகழ்ச்சிகள் மூலம் திட்டம் பற்றிய விழிப்புணர்வை உரு வாக்குதல்.

மாநிலங்கள், மின் வினி யோக நிறுவனங்கள் உள் பட பல்வேறு நிலைகளில் திட்டத்தின் முன்னேற் றத்தை தொடர்ந்து கண்கா ணித்தல். பிராந்திய மதிப் பாய்வுக் கூட்டங்களை நடத்துதல். குறைகளை சரி யான நேரத்தில் தீர்க்கும் வகையில் குறை தீர்க்கும் வழிமுறை நிறுவப்பட்டு உள்ளது. 15555 என்ற தொலைபேசி எண்ணைக் கொண்ட அழைப்பு மையம் 12 மொழிகளில் செயல்படுகி றது.

## தி.மு.க. சட்டத்துறையால் நியமிக்கப்பட்ட மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் (DLC) - சட்டமன்றத் தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் (CLC-2) ஆலோசனைக் கூட்டம்!

**கழக சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ, எம்.பி., அறிக்கை!**

தி.மு.க. சட்டத்துறையால் நியமிக்கப்பட்ட மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் (DLC) - சட்டமன்றத் தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் (CLC-2) ஆலோசனைக் கூட்டம் நாளை 13-12-2025 சனிக்கிழமை காலை 10.00 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் சட்டத்துறைத் தலைவர் மூத்த வழக்கறிஞர் இரா.விடுதலை அவர்கள் தலைமையில், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் சிறப்புரையாற்றிட கழக சட்டத்துறை இணைச் செயலாளர்கள் துணைச் செயலாளர்கள் தலைமைக் கழக வழக்கறிஞர்கள் ஆகியோர் கலந்து கொள்ள நடைபெறும்.

இக்கூட்டத்தில் தி.மு.க. மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் சட்டத்துறையால் (DLC) நியமிக்கப்பட்ட சட்டமன்றத் தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் (CLC-2) இருவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: SIR குறித்து

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை-18.
நாள் : 01-12-2025.

**என்.ஆர்.இளங்கோ, எம்.பி.,**
செயலாளர்,
தி.மு.க. சட்டத்துறை

கழக கல்வியாளர் அணித் தலைவர் புலவர் செந்தலை ந.கவுதமன் கோரிக்கை ஏற்பு!

# 'சிந்து சரசுவதி' மதவெறிக் கருத்தரங்கத்தைக் கோவைக் கல்லூரி கைவிட்டது!

*கோவை, டிச. 12 -*

சிந்துவெளி நாகரிகத்தை 'சிந்து சரசுவதி ' நாகரிகம் என மாற்றித் தமிழர் வர லாற்றைச் சிறுமைப்படுத்த மதப்புரட்டர்களும் தமி ழின எதிரிகளும் கோவை யில் முயற்சி எடுத்தார்கள். அவர்கள் எடுத்த கெடுமு யற்சி தடுத்து நிறுத்தப்பட்டு விட்டது.

' சரசுவதி நாகரிகம் ' எனும் புராணப்பொய்யை ஆய்வுக் கருத்தரங்கமாக நடத்தி நம்ப வைக்க முயன் றது கோவை கொங்குநாடு கலைஅறிவியல் கல்லூரி !

மதவெறிக் கருத்தரங்கம் நடத்த எதிர்ப்பு வலுத்த தால் , நிகழ்ச்சியை ஒத்தி வைப்பதாகக் கல்லூரி அறி வித்துள்ளது.

திசம்பர் 12 , 13 நாள்க ளில் நிகழவிருந்த மதவெ றிக் கருத்தரங்கம் கோவை முற்போக்கு அமைப்புக ளின் ஒன்றுபட்ட எதிர்ப் பால் விலக்கிக்கொள்ளப்ப பட்டுவிட்டது.

ஆர்.எஸ்.எஸ். மதவெறி அமைப்பின் கிளையான தென்னிந்திய ஆய்வு மையம்(CSIS) கல்லூரிகளுக் குள் கருத்தரங்கம் என்ற பெயரில் நுழைந்து மத வெறி நச்சுக்கருத்துகளைப் புகுத்தும் முயற்சி கோவை யில் முறியடிக்கப்பட் டுள்ளது.

தி.மு.க. கல்வியாளர் அணியின் தலைவர் புலவர் செந்தலை ந.கவுதமன் விடுத்த கண்டன அறிக்கை தமிழ்நாடு முழுதும் உள்ள கல்வித்துறை ஆர்வலர்களி டம் பெரும் வரவேற்பைப் பெற்று விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

மதவெறிக் கருத்தரங்கை நடத்த இருந்த கல்லூரி யைக் கோவை முற்போக்கு அமைப்புகள் முற்றுகை யிடத் திட்ட மிட்டிருந்த னர். மதவெறிக் கருத்தரங் கம் கைவிடப்பட்டு விட்ட தால் முற்றுகைப் போராட் டமும் கைவிடப்பட்டது.



இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேற்று (11.12.2025) சிங்காரச் சென்னை 2.0 திட்டத்தின் கீழ் ரூ.32.62 கோடி மதிப்பில் தொன்மை மாறாமல் புனரமைக்கப்பட்டுள்ள விக்டோரியா பொது அரங்கத்தினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, மேயர் திருமதி ஆர்.பிரியா, ஆணையாளர் ஜெ. குமரகுருபரன் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.



செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் ஒன்றியம், சோனலூர் ஊராட்சி தாங்கல் ஏரியில் அமைச்சர் தா.மோ.அன்பரசன் நீர் நிலைகளில் மீன் குஞ்சு இருப்பு செய்யும் திட்டத்தினை துவக்கி வைத்தார்கள். இதில், சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.பாலாஜி, மாவட்ட வருவாய் அலுவலர் மா.கணேஷ் ஒன்றிய குழுத்தலைவர் எஸ்.ஆர்.எல்.இதயவர்மன், கழக நிர்வாகிகள் ஜி.சி.அன்புச்செழியன், எம்.சேகர், மு.தேவராஜ், சி.பிரதீப், மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.